## October 22 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. வரும் அக். 31- இல் தொடங்கும் 2025 ஃபிடே உலகக் கோப்பை செஸ் போட்டிக்கான இலச்சினையை (லோகோ) கோவா முதல்வர் பிரமோத் சாவந்த் அறிமுகம் செய்தார்.
   i. சர்வதேச செஸ் சம்மேளனம் (ஃபிடே) சார்பில் உலகக்கோப்பை செஸ் போட்டி அக்.31 முதல் நவ. 27 நடைபெறவுள்ளது. ஏறக்குறைய 23 ஆண்டுகள் கழித்து இந்தியாவில் மீண்டும் இப்போட்டி நடைபெறுகிறது.
   ii. இதில் 82 நாடுகளில் இருந்து 206 வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்கின்றனர்.
   iii. இந்திய அணியில் ஆடவர் பிரிவில் உலக சாம்பியன் குகேஷ் பிரக்ஞானந்தா, அர்ஜுன் எரிகைசி, நிஹால் சரீன், விதித் குஜராத்தி, மகளிர் பிரிவில் உலகக் கோப்பை சாம்பியன் திவ்யா தேஷ்முக் பங்கேற்கின்றனர். போட்டியின் சிறப்பாக ஆர்ஜென்டீனாவின் 12 வயது சிறுவன் ஃபாஸ்டினோ ஓரோ பங்கேற்கிறார்.
2. ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா தொடர்ந்தால், கூடுதல் வரியைச் செலுத்த வேண்டியிருக்கும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மீண்டும் எச்சரித்துள்ளார்.
   i. முன்னதாக, ரஷியாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதைத் தொடர்ந்தால், இந்திய பொருள்களுக்கு கூடுதலாக 50 சதவீத வரி விதிக்கப்படும். இதையொட்டி, ரஷிய எண்ணெய் கொள்முதலை நிறுத்துவதாக பிரதமர் நரேந்திர மோடி தன்னிடம் உறுதி அளித்ததாகவும் அதிபர் டிரம்ப் ஏற்கெனவே கூறியிருந்தார். ஆனால், இதை இந்திய வெளியுறவு அமைச்சகம் மறுத்துவிட்டது. 'சந்தை நிலவரங்களைக் கருத்தில் கொண்டு, நாட்டின் எரிசக்தி ஆதாரங்களை அதிகப்படுத்துவதே தங்கள் நோக்கம்' என்று விளக்கமளிக்கப்பட்டது.
   ii. ரஷியாவுடன் தொடர்ந்து எண்ணெய் வர்த்தகத்தில் ஈடுபட்டு, உக்ரைன் போரில் ரஷியாவுக்கு இந்தியா நிதி ஆதாரம் அளிப்பதாக அமெரிக்கா விமர்சித்து வருகிறது. இதையொட்டி, அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் சில இந்திய பொருள்களுக்கான வரி 50 சதவீதமாக உயர்த்தப்பட்டது.
   iii. அரியவகை கனிமப் பொருள்களுக்கான விதிமுறைகளை சீனா கடுமையாக்கியுள்ள நிலையில், வர்த்தக ஒப்பந்தத்துக்கு உடன்படாவிட்டால் அந்நாட்டின் மீது கூடுதலாக 100 சதவீத வரி விதிக்கப் போவதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார். சீனா மீது அதிபர் டிரம்ப் ஏற்கெனவே 30 சதவீத கூடுதல் வரி விதித்துள்ளார். இதன்மூலம் சீன பொருள்களுக்கான மொத்த வரி விகிதம் சுமார் 55 முதல் 57 சதவீதமாக உள்ளது.
3. ஃபார்முலா ஒன் கார் பந்தயத்தில், நடப்பு சீசனின் 19-ஆவது ரேஸான யுனைடெட் ஸ்டேட்ஸ் கிராண்ட் ப்ரீயில் நெதர்லாந்து வீரரும், ரெட் புல் டிரைவருமான மேக்ஸ் வெர்ஸ் டாபென் வெற்றி பெற்றார்.
   i. இந்தப் பந்தயத்தில் அவர் முதலிடம் பிடிக்க, பிரிட்டன் வீரரும், மெக்லாரென் டிரைவருமான லாண்டோ நோரிஸ் 2-ஆம் இடமும், மொனாகோ வீரரும், ஃபெராரி டிரைவருமான சார்லஸ் லெக்லெர்க் 3-ஆம் இடமும்பிடித்தனர்.
4. ஜப்பானின் முதல் பெண் பிரதமராக தேர்ந்தெடுக்கப் பட்டதன் மூலம், அந்த நாட்டின் பொருளாதார மற்றும் பாதுகாப்புத் துறை முன்னாள் அமைச்சர் சனே தகாய்ச்சி (64) புதிய வரலாறு படைத்துள்ளார்.
   i. இது தொடர்பாக நாடாளுமன் றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் அவருக்கு ஆதரவாக 237 வாக்குகளும், எதிராக 149 வாக்குகளும் பதிவாகின. பெரும்பான்மைக்குத் தேவையான 233 வாக்குகளைவிட நான்கு வாக்குகள் அதிகமாகவே கிடைத்ததால் நாட்டின் புதிய பிரதமராக சனே தகாய்ச்சி தேர்வு

செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ii. தனது அமைச்சரவையில் பெண்களுக்கான பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதாக உறுதியளித்துள்ள சனே தகாய்ச்சி, நாட்டின் முதல் பெண் நிதியமைச்சராக சட்சுகிகடயாமாவையும் பொருளாதார பாதுகாப்புத் துறை அமைச்சராக கிமி ஒனாடாவையும் நியமித்துள்ளார்.

iii. மேலும், 19 உறுப்பினர்களைக் - கொண்ட தனது அமைச்சரவையில் ஐஸ்லாந்து, ஃபின்லாந்து, - நார்வே ஆகிய நாடுகளைப் போல் அதிக பெண்களுக்கு 5 இடமளிக்கவிருப்பதாக தகாய்ச்சி உறுதியளித்துள்ளார்.

5. கடந்த 11 ஆண்டுகளில் நாட்டின் பாதுகாப்புத் துறை உற்பத்தி மதிப்பு மும்மடங்கு உயர்ந்து, ரூ.1.5 லட் சம் கோடியைக் கடந்துள்ளது. என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

   i. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 'ஐஎன்எஸ் விக்ராந்த்' விமானந்தாங்கி போர்க் கப்பலில் கடற்படை வீரர்களுடன் தீபாவளி கொண்டாட்ட நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய போது அவர் இவ்வாறு கூறினார்.

   ii. கொச்சி கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்ட மிகப்பெரிய விமானந்தாங்கி போர்க்கப்பலான ஐஎன்எஸ் விக்ராந்த், கடந்த 2022- இல் கடற்படையில் இணைக்கப்பட்டது. இது, உள்நாட்டில் கட்டப்பட்ட முதலாவது விமானந்தாங்கி போர்க் கப்பலாகும்.

   iii. கோவா - கர்வார் (கர்நாடகம்) கடல் பகுதியில் இப்போர்க்கப்பலில் பிரதமர் மோடி தீபாவளி கொண்டாட்டத்தில் பங்கேற்றார்.

   iv. இரவு முழுவதும் கப்பலில் தங்கியிருந்த அவர், மறுநாள் காலையில் யோகா அமர்வில் பங்கேற்றார். போர்க்கப்பல்களின் கம்பீர அணிவகுப்பையும் பார்வையிட்டார். ஐஎன்எஸ் விக்ரமாதித்யா (மற்றொரு விமானந்தாங்கி கப்பல்), ஐஎன்எஸ் சூரத், ஐஎன்எஸ் மர்மகோவா, ஐஎன்எஸ் சென்னை, ஐஎன்எஸ் இம்பால், ஐஎன்எஸ் கொல்கத்தா, ஐஎன்எஸ் துஷில், ஐஎன்எஸ் தாபர், ஐஎன்எஸ் தேஜ். ஐஎன்எஸ் பெட்வா, ஐஎன்எஸ் தீபக், ஐஎன்எஸ் ஆதித்யா ஆகிய போர்க் கப்பல்கள் அணிவகுப்பில் பங்கேற்றன. சேத்தக், எம்ஹெச் 60ஆர், சீகிங், கமோவ் 31 ரக ஹெலிகாப்டர்களின் சாகசமும் நிகழ்த்தப்பட்டது.

6. அமெரிக்காவின் 'எச்1பி' விசாக்களுக்கு டிரம்ப் நிர்வாகம் விதித்த 1 லட்சம் டாலர் (இந்திய மதிப்பில் ரூ.88 லட்சம்) கட்டணம், விசா நிலையை மாற்றுபவர்களுக்கும் அல்லது விசா காலத்தை நீட்டிப்பவர்களுக்கும் பொருந்தாது என்று அமெரிக்க அரசு புதிய வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. இதுதொடர்பாக அமெரிக்க குடியுரிமை மற்றும் குடியேற்ற சேவைகள் துறை (யுஎஸ்சிஐஎஸ்) தெரிவித்திருப்பதாவது:

   i. அமெரிக்காவில் ஏற்கெனவே தங்கியிருக்கும் வெளிநாட்டவர்கள், தங்களுடைய விசா வகையை மாற்றிக்கொள்ள ஒரு லட்சம் டாலர் கட்டணம் விதிக்கப்படாது. அதாவது, மாணவர் விசா வைத்துள்ள வெளிநாட்டவர்,'எச்1பி' விசாவுக்கு மாறினால் புதிய கட்டணம் வசூலிக்கப்படாது.

   ii. இதேபோன்று, தற்போதைய 'எச்1பி' விசா காலத்தை நீட்டிக்க விண்ணப்பித்தால், அவர்களுக்கும் இந்த 1 லட்சம் டாலர் கட்டணம் விதிக்கப்படாது. செப்டம்பர் 21-ஆம் தேதிக்குமுன் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் 'எச்1பி விசாக்கள் அல்லது அதற்குமுன் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு இந்தப் புதிய கட்டணம் பொருந்தாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

   iii. உலகம் முழுவதும் இருந்து பல்வேறு நாடுகளைச் சேர்ந்த திறமையான பணியாளர்களை அமெரிக்காவில் தங்களின் நிறுவனங்களில் பணியமர்த்த 'எச்1பி' விசா நடைமுறையை அந்நாட்டு நிறுவனங்கள் பின்பற்றுகின்றன.

அந்தவகையில், ஏராளமான இந்திய தொழில் வல்லுநர்கள் அமெரிக்க நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர்.

iv. இந்நிலையில், 'எச்1பி' விசாக்களுக்கு புதிய கட்டணமாக 1 லட்சம் டாலரை நிர்ணயித்து அதிபர் டொனால்ட் டிரம்ப் கடந்த செப்டம்பர் 19-ஆம் தேதி அறிவித்தார். இச்சூழலில் தற்போதைய புதிய விளக்கம், அமெரிக்காவில் உயர்கல்வியை முடித்து, அங்கேயே வேலைவாய்ப்புக்கு முயற்சிக்கும் திட்டத்தில் உள்ள இந்தியர்கள் உள்ளிட்ட வெளிநாட்டவர்களுக்கு பெரும் நிம்மதியளித்துள்ளது.

7. இந்தியாவில் இருந்து தோல் நீக்கப்படாத இறால் ஏற்றுமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை ஆஸ்திரேலியா நீக்கியுள்ளதாக ஆந்திர தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் நாரா லோகேஷ் தெரிவித்தார்.
   i. இந்திய இறால்களில் வைரஸ் இருந்தது கண்டறியப்பட்டதால் அதன் இறக்குமதிக்கு ஆஸ்திரேலியா சில ஆண்டுகளுக்கு முன்பு தடைவிதித்தது.
   ii. எனினும், அமெரிக்காவுக்கு அதிகஅளவில் இறால் ஏற்றுமதி செய் lயப்பட்டதால், ஆஸ்திரேலியாவின் தடையால் பாதிப்பு ஏற்படவில்லை. அண்மையில் அமெரிக்க அதிபர் டிரம்ப் விதித்த வரியால் ஆந்திரத்தில் இறால் ஏற்றுமதி கடுமையாக பாதித்தது. அமெரிக்க ஏற்றுமதி ஒப்பந்தம் 50 சதவீதம் வரை ரத்தானது.
   iii. நாட்டின் இறால் ஏற்றுமதியில் 80 சதவீதம் ஆந்திரத்தின் பங்களிப்பாகவே உள்ளது. இதன் மதிப்பு ஆண்டுக்கு ரூ.21,246 கோடியாகும்.

8. அண்டர் 19 மகளிர் இரட்டையர் டேபிள் டென்னிஸ் தரவரிசையில் இந்தியாவின் சிண்ட் ரெல்லா தாஸ்/திவ்யன்ஷி பௌமிக் கூட்டணி உலகின் நம்பர் 1 இடத்தைப் பிடித்து சாதனை படைத்தது.

9. குற்றவியல் வழக்கில் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்ற பிரான்ஸ் முன்னாள் அதிபர் நிக்கோலஸ் சர்கோஸி, தனது சிறைவாசத்தை தொடங்கினார். லிபியாவிடம் இருந்து பெற்ற நிதியை தனது தேர்தல் பிரசாரத்துக்காக சர்கோஸி பயன்படுத்தியதாக குற்றஞ்சாட்டுள்ளது.

10. மேட்டூர் அணை நிகழாண்டு 7 ஆவது முறையாக முழுக் கொள்ளளவை எட்டியது. அணைக்கு நீர் வரத்து விநாடிக்கு 35,500 கனஅடியாக உள்ளதால் 40 நாள்களுக்குப் பிறகு உபரிநீர்ப்போக்கிகள் வழியாக 22,300 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.
   i. கர்நாடக காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும், காவிரியின் துணை ஆறுகளான பாலாறு, சின்னாறு, தொப்பையாறு நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் தொடர்ந்து மழை பெய்து வருவதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 30,500 கனஅடியாக அதிகரித்தது.
   ii. இதையடுத்து அணை நிகழாண்டில் 7 ஆவது முறையாக முழுக் கொள்ளளவான 120 அடியை எட்டியது.